# திண்டிவனம் நகராட்சி

## அவசரக்கூட்டம்

## முன்னிலை : **திருமதி.ஆர்.நிர்மலா.**, நகர மன்ற தலைவர்.

30.10.2024 புதன் கிழமை அன்று பிற்பகல் 4.30 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற உள்ள நகர மன்ற அவசரக் கூட்டப் பொருள் விபரம்.

| வ. எண் | பொருள் விபரம் |
|---|---|

**1**

இந்நகராட்சியில் **குடிநீர் நிதி – 2024–2025**ன் கீழ் 28.08.2024 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | | குறைந்த ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | திண்டிவனம் நகர பகுதியில் குடிநீர் விநியோக பணி கை பம்பு பராமரிப்பு பணி, திறந்தவெளி கிணறு மோட்டார்கள் இயக்கும் பணி (பூதேரி கிணறு, திண்டிவனம் ஏரி கிணறு, வண்ணங்குட்டை கிணறு) மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் குடிநீர் திறப்பு ஆகிய பணிகளுக்கு ஆட்கள் அமர்த்தும் பணி. **(ஒரு ஆண்டிற்கு)** | 31.59 | M/s KS & Co | – | –0.14 | M/s KS & Co, Kooteripattu. |
| | | | M/s Naveen Construction | +11.73 | – | |

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 7ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள KS & CO கூட்டேரிப்பட்டு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3745/2024/இ2)

**தீர்மானம் எண் :194, நாள் : 30.10.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

**2**

திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, திண்டிவனம் கிராம பழைய சர்வே எண்.126/1, வார்டு –B, பிளாக் 1, T.S.NO.3/1A2–ல் சம்மந்தப்பட்ட 1.54 ஏக்கர் (6,232.00ச.மீ) பரப்புள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்.VV74200E/2024/TCP, நாள்.25.03.2024–ல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்தரவில் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மனைபிரிவு ஒப்புதல் எண்.ம.வ / ந.ஊ.உ..இ (வி.மா)எண்.55/2024–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ள மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களுக்கான தானப்பத்திரம்

| | |
|---|---|
| | உள்ளாட்சிக்கு பத்திர எண்.440/2024, நாள்.05.02.2024–ல் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.12843/2022/டிடி2, நாள்.20.10.2022–ல் தெரிவித்துள்ளவாறு சாலை, சிறுபாலம், மழைநீர் கால்வாய் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு மூன்றாம் நபர் ஆய்வு நாள்.12.04.2024–ல் ஆய்வு செய்யப்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் தரமாக உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட பொது ஒதுக்கீடுகளை ஏற்கவும், உரிய கட்டணங்கள் செலுத்தி நகர் ஊரமைப்பு துறையின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அபிவிருத்தி கட்டணங்கள் செலுத்தப்பட்டுவிட்டதாலும், நகர்மன்ற தலைவரின் பின்னேற்பு பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1141/எப்1/2024)**<br>**தீர்மானம் எண் :195, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 3 | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10, திண்டிவனம் கிராம பழைய சர்வே எண்.5/14, 5/15pt மற்றும் வார்டு – B, பிளாக் 6, T.S.NO.19/73 மற்றும் காவேரிப்பாக்கம் கிராம சர்வே எண்,14/8, 14/9, 14/10, 14/11 வார்டு – E, பிளாக் 9, T.S.NO.6/14, 6/36–ல் சம்மந்தப்பட்ட 1.26 ஏக்கர் (5,100ச.மீ) பரப்புள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்.5S5RRFKX/2024/TCP, நாள்.20.03.2024–ல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்தரவில் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மனைபிரிவு ஒப்புதல் எண்.ம.வ / ந.ஊ.உ.இ (வி.மா)எண்.51/2024–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ள மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களுக்கான தானப்பத்திரம் உள்ளாட்சிக்கு பத்திர எண்.526/2024, நாள்.05.02.2024–ல் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.12843/2022/டிடி2, நாள்.20.10.2022–ல் தெரிவித்துள்ளவாறு சாலை, சிறுபாலம், மழைநீர் கால்வாய் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு மூன்றாம் நபர் ஆய்வு நாள்.12.04.2024–ல் ஆய்வு செய்யப்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் தரமாக உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட பொது ஒதுக்கீடுகளை ஏற்கவும், உரிய கட்டணங்கள் செலுத்தி நகர் ஊரமைப்பு துறையின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அபிவிருத்தி கட்டணங்கள் செலுத்தப்பட்டுவிட்டதாலும், நகர்மன்ற தலைவரின் பின்னேற்பு பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1142/எப்1/2024)**<br>**தீர்மானம் எண் :196, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு காட்ராம்பாக்கம் தலைமை நீரேற்றும் நிலையம், ரெட்டணை தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் இறையானூர் நீருந்தும் நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகிக்க தனியார் மூலம் ஒப்பந்த முறையில் 01.09.2024 30.11.2024 வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய நகரமன்ற தீர்மான எண். 183, நாள்.10.09.2024ல் அனுமதி பெறப்பட்டு கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது மேற்கண்ட |

| | |
|---|---|
| | தலைமை நீரேற்றங்களுக்கு செல்லும் பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை சரி செய்யவும், ரெட்டணை தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் இறையானூர் நீருந்தும் நிலையங்களில் உள்ள 40HP மின் மோட்டார் மற்றும் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், காட்ராம்பாக்கம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இயங்கும் 20HP மற்றும் 15 HP மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.250000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்1504/2021/இ2)<br>**தீர்மானம் எண் :197, நாள் : 30.10.2024**<br>**<u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>** |
| 5 | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, திண்டிவனம் கிராம பழைய சர்வே எண்.127/12pt, வார்டு -B, பிளாக் 1, T.S.NO.2/6B-ல் சம்மந்தப்பட்ட 1.05 ஏக்கர் (4,250.00ச.மீ) பரப்புள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்.ZPQLZJOV/2024/TCP, நாள்.25.03.2024-ல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்தரவில் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மனைபிரிவு ஒப்புதல் எண்.ம.வ / ந.ஊ.உ.இ (வி.மா)எண்.56/2024-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ள மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களுக்கான தானப்பத்திரம் உள்ளாட்சிக்கு பத்திர எண்.439/2024, நாள்.05.02.2024-ல் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.12843/2022/டிடி2, நாள்.20.10.2022-ல் தெரிவித்துள்ளவாறு சாலை, சிறுபாலம், மழைநீர் கால்வாய் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு மூன்றாம் நபர் ஆய்வு நாள்.12.04.2024-ல் ஆய்வு செய்யப்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் தரமாக உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட பொது ஒதுக்கீடுகளை ஏற்கவும், உரிய கட்டணங்கள் செலுத்தி நகர் ஊரமைப்பு துறையின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அபிவிருத்தி கட்டணங்கள் செலுத்தப்பட்டுவிட்டதாலும், நகர்மன்ற தலைவரின் பின்னேற்பு பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1141/எப்1/2024)<br>**தீர்மானம் எண் :198, நாள் : 30.10.2024**<br>**<u>அனுமதிக்கப்பட்டது.</u>** |
| 6 | அரசாணை (நிலை) எண்.2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் [MA-3(2)] துறை, நாள்.03.01.2020. ரூ.268.00 இலட்சம் மதிப்பீட்டில் திண்டிவனம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்திற்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்ட (IUDM) நிதி ரூ.67.00 கோடி மதிப்பீட்டில் HUDCO கடன் தொகை ரூ.174.20 கோடி, நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.26.80 கோடியும் ஆக மொத்தம் ரூ.268.00 கோடிக்கு செயல்படுத்த நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. HUDCO கடனாக தொகை ரூ.56.97 கோடி TUFIDCO நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. அரசாணை எண்.438, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-3) துறை, நாள்.05.08.2024ல் திண்டிவனம் நகராட்சி பாதாள சாக்கடை |

| | |
|---|---|
| | திட்டத்திற்கு வரவேண்டிய ரூ.117.23 கோடி HUDCO கடன் இரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக TUFIDCO தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட் மூலம் State Urban Infrastructure Development Fund (SUIDF) நிதியின் கீழ் மீதம் உள்ள தொகை ரூ.117.23 கோடி கடனாக ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தினை செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது பாதாள சாக்கடை திட்டப்பணி நடைபெற்று வருகிறது இந்நிலையில் திரு.C.தினேஷ்குமார் என்பவர் பாதாள சாக்கடை திட்ட பணிகள் குறித்து வழக்கு எண்.W.P.No.14391 of 2024ல் வழக்கு தொடரப்பட்டதற்கு மாண்பமிகு உயர்நிதிமன்ற நிதியாரசர் சென்னை அவர்களின் 29.05.2024 நாளிட்ட தீர்ப்புரையில் மேற்படி பாதாள சாக்கடை திட்டப்பணிகள் குறித்து வழக்கு தொடர்ந்த சம்மந்தப்பட்டவர்களை அழைத்து உடனடியாக தீர்வுகானும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது வழக்கு தொடர்பாக J.ரவிந்தீரன் அரசு கூடுதல் வழக்கறிஞர் மூலம் எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்கு கட்டணம் ரூ.30000/- மற்றும் V.யமுனாதேவி சிறப்பு அரசு வழக்கறிஞர் மூலம் எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்கு கட்டணம் ரூ.10000/- ஆக மொத்தம் ரூ.40000/-ஐ வருவாய் நிதிலிருந்து செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1218/2024/இ2)<br>**தீர்மானம் எண் :199, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 7 | இந்நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால், ஆதவ் சொலுஷன், விழுப்புரம் நிறுவனத்தின் மூலம் வெளிக்கொணர்வு (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் இரண்டு கணினி தொழில்நுட்ப பணியாளர்களை நாள் ஒன்றுக்கு தினக்கூலி ரூ.850/-என்ற அடிப்படையில் சப்ளை செய்யப்பட்டு கணினி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த பணிக்காலம் மார்ச் 2025 உடன் முடிவடைகிறது.<br>இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்தால் மாவட்ட ஆட்சியரின் 2024-2025ம் ஆண்டின் ஷெட்யூல் ரேட்டின் பணி மேற்கண்ட இரண்டு வெளிக்கொணர்வு கணினி தொழில் நுட்ப பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலி ரூ.901/- என உயர்த்தி வழங்கிட 03.10.2024ல் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட நிறுவனத்தின் கோரிக்கையினை ஏற்றும், மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். E-1984604-17654/2024 நாள். 18.07.2024ன் படி 2024-2025ம் ஆண்டின் கணினி தொழில் நுட்பபணியாளர்களுக்கு மேற்கண்ட செயல்முறையின் ஷெட்யூல் ரேட்டின் படி கணினி தொழில் நுட்ப பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.901/- என தினக்கூலி நிர்ணயம் செய்து இரண்டு வெளிக்கொணர்வு கணினி ஒப்பந்த தொழில் நுட்ப பணியாளர்களுக்கு அக்டோபர் 2024 மாத ஊதியத்திலிருந்து உயர்த்தி வழங்கிடவும், அதற்காகும் கூடுதல் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3685/2018/சி1)<br>**தீர்மானம் எண் :200, நாள் : 30.10.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 8 | திண்டிவனம் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் டெங்கு தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அக்டோபர், நவம்பர், டிசம்பர் - 2024 மற்றும் ஜனவரி, பிப்ரவரி - 2025 ஆகிய 5 மாதங்களுக்கு மட்டும் 60 DBC பணியாளர்களை ஈடுபடுத்திட புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பணி மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.48.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.186 நாள்.10.09.2024-ல் அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கையாக 25.09.2024-ல் புதிய மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நிர்வாக காரணங்களால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி 16.10.2024-ம் தேதியன்று |

| | |
|---|---|
| | ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் டெங்கு நோய் தடுப்பு பணியினை மேற்கொள்ள மகளிர் சுய உதவிக் குழு மூலம் 40 DBC பணியாளர்களை கொண்டு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஊதிய அடிப்படையில் ஒரு பணியாளருக்கு நாளொன்றுக்கு ரூ.400/- என்ற விகிதத்தின் படி 01.10.2024 முதல் 30.10.2024 வரை 30நாட்களுக்கு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>01.10.2024 முதல் 30.10.2024 வரை 30 நாட்களுக்கு மட்டும் மகளிர் சுய உதவிக் குழு மூலம் 40 DBC பணியாளர்களை கொண்டு டெங்கு காய்ச்சலை தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்திடவும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4144/2022/எச்1)<br><br>**தீர்மானம் எண் :201, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 9 | திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு எதிரில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆவின் பாலகம் அமைத்திட இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண். 2879/2020/அ1. நாள். 02.12.2022 ன் மூலம் 01.08.2021 முதல் 31.07.2024 வரை மூன்றாண்டு காலத்திற்கு பொது மேலாளர்,விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய லிட், விழுப்புரம் என்ற பெயரில் மாத வாடகை ரூ.2000 மற்றும் 18%GST தொகை ரூ.360 ஆக மொத்தம் ரூ.2360/- க்கு வரி விதிப்பு எண். 043/LD02/00011 மூலம் பல்வகை கேட்பு பதிவேட்டில் கேட்டு எழுப்பப்பட்டு உரிமம் ஒப்படைக்கப்பட்டது.<br>மேற்படி கடை வாடகையின் உரிமம் ஒப்படைப்பு காலம் 31.07.2024 உடன் முடிவடைந்துவிட்டது. மேற்கண்ட நிறுவனத்தால் மாத வாடகை நிலுவை இல்லாமல் செலுத்தப்பட்டு விட்டது.<br>மேற்கண்ட ஆவின் பாலகத்தினை 01.08.2024 முதல் 31.07.2027 வரை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கடை வாடகை உரிமத்தினை, அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007ல் தெரிவித்துள்ளபடி குத்தகை உரிமம் புதுப்பிக்கும் போது பழைய கேட்புடன் ஆண்டொன்றுக்கு 5 சதவீதம் வீதம் வாடகை உயர்த்தி மூன்று ஆண்டுகளுக்கு 15 சதவீதம் கேட்பு உயர்த்தி உரிமம் புதுப்பிக்க அறிவுறுத்தப்பட்டதிற்கிணங்க, திண்டிவனம் அரசு மருத்துவமனை எதிரில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் செயல்படும் ஆவின் பாலகத்திற்கு பழைய கேட்புடன் 15 சதவீதம் வாடகை உயர்த்தி அதனுடன் 18% GST சேர்த்து கடை வாடகையினை கீழ்க்கண்டவாறு உயர்வு செய்யப்பட்டுள்ளது.<br>எனவே ஆவின் பாலகம் உயர்த்தப்பட்ட விவரத்தினை ஆவின் நிர்வாகம் அல்லது ஆவின் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவருக்கு தெரிவிக்கவும், உரிமம் புதுப்பிக்க புதுப்பித்தல் கட்டணம், கூடுதல் டெப்பாசிட் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம். உயர்த்தப்பட்ட வாடகையின் விவரத்தினை மன்றத்தில் மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | கடையின் விவரம் | கடை உரிமம்தாரர் பெயர் | வரி விதிப்பு எண் | பழைய கேட்பு தொகை | GST தொகை 18% | பழைய கேட்பின் மொத்த வாடகை | புதிய கேட்பு தொகை | GST தொகை 18% | புதிய கேட்பின் மொத்த தொகை | கூடுதலாக உயர்த்தப் பட்ட வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆவின் பாலகம் முருங்கப் பாக்கம் அரசு மருத்து மனை எதிரில் | பொது மேலாளர், விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியா ளர் ஒன்றிய லிட் விழுப்புரம் | 043/ LD02/ 00011 | 2000 | 360 | 2360 | 2300 | 414 | 2714 | 354 |

உயர்த்தப்பட்ட வாடைகையின் விவரத்தினை ஆவின் நிர்வாகத்திற்கு அறிவிப்பு கடிதம் அனுப்பி, புதுப்பித்தல் கட்டணம் ரூ.500 மற்றும் 12 மாத உயர்த்தப்பட்ட வாடகையின் கூடுதல் டெப்பாசிட் ரூ. 3600/- செலுத்தி ரூ.200/- மதிப்புள்ள ஒப்பந்த பத்திரத்தில் உறுதி மொழி பெற்று குத்தகை விதிகளின்படி உரிமம் புதுப்பிக்கலாம். தவறும் பட்சத்தில் குத்தகை விதிகளின்படி மேற்கண்ட இனத்திற்கு செலுத்திய வைப்புத் தொகையிலிருந்து கூடுதல் மாதத்திற்கான வாடகையினை ஈடு செய்து உரிமம் ரத்து செய்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) ஆவின் நிர்வாகம் அல்லது ஆவின் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலமாகவோ நிபந்தனைகளுக்கு உட்பட்டு புதுப்பித்தல் கட்டணம் ரூ.500/ , கூடுதல் வைப்புத் தொகை ரூ.3600/- வசூலித்து ரூ.200/-க்கான முத்திரைதாளில் ஒப்பந்தப்பந்திரம் பெற்றும் ஆவின் பாலகம் மேற்கண்ட இடத்தில் மூன்று வருடங்களுக்கு உரிமம் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

3)உயர்த்தப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்தற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

4)ஆவின் நிர்வாகம் அல்லது ஆவின் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவரால் தொகை செலுத்தப்பட்டவுடன் குத்தகை விதிகளின் படி மேலும் மூன்றாண்டிற்கு கேட்பு எழுப்பி வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

5)தவறும் பட்சத்தில் உரிமத்தினை ரத்து செய்து வைப்புத் தொகை பறிமுதல் செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2879/2020/அ1)

**தீர்மானம் எண் :202, நாள் : 30.10.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

10 நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு கடித ந.க.எண்.13277/2018/WS1, நாள்.03.07.20218-ல் தவனை முறை திட்டத்தில் 11217 எண்ணிக்கை குடிநீர் இணைப்புகள் வழங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. தற்போது வரை 1859 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 9358 குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரால் நடத்தப்படும் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களில் அனைத்து வீடுகளுக்கும் தவணை முறையில் (குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இணைப்புகள் வழங்க தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

எனவே திண்டிவனம் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் பொது குழாய்களை

| | |
|---|---|
| | அகற்றி விட்டு தவணை முறை திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4425/2018/இ2)<br>**தீர்மானம் எண் :203, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 11 | இந்நகராட்சி குடிநீர் விநியோகத்தில் தினசரி குளோரினேஷன் செய்வதற்கு தேவையான திரவ குளோரின் (Liquid Chlorine) தேவைக்கேற்ப அவ்வப்போது வாங்கவும், இறையானூர் நீர் உந்து நிலையத்தில் உள்ள Chlorination Plant பழுதடைந்துள்ளதை சரி செய்யவும் மற்றும் ரெட்டனை தலைமை நீரேற்று நிலையம், ஜெயபுரம் நீர் உந்து நிலையம் ஆகிய இடங்களில் புதியதாக Chlorination Plant அமைத்து அதன் வழியாக குளோரினேஷன் செய்யவும் அதற்கான மதிப்பீடு ரூ.29.00 இலட்சத்திற்கும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3482/2024/இ2)<br>**தீர்மானம் எண் :204, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 12 | திண்டிவனம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 33 வரையிலான வார்டுகளில் பொதுப்பணிகளை மேற்கொள்ள 15வது நிதி குழு (2023–2024) நிதியின் மூலம் ரூ.25.00 இலட்சத்தில் Jcb Skid Street Loader வாகனம் வாங்கப்பட்டது. வாகனத்திற்கு Life Tax கட்டணம் மற்றும் Reflecter Sticker கட்டணம் ஆகியவற்றை மேற்கொள்ள ரூ.190000/–ஐ வருவாய் நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 1483/2023/இ1)<br>**தீர்மானம் எண் :205, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 13 | திண்டிவனம் நகராட்சி வார்டு எண்.6ல் ரோஷனை பாட்டை முகமது தெருவில் திரு.V.பங்கஜ் த/பெ வித்யாசந்த் அவர்கள் தன்னுடைய தந்தை திரு.J. வித்யாசந்த் அவர்களின் நினைவாக தன்னுடைய சொந்த செலவில் புதியதாக அங்கன்வாடி மைய கட்டிடம் அமைத்து தருவதற்கு நகராட்சி அனுமதி வழங்க கோரி 6வது வார்டு நகரமன்ற உறுப்பினர் அவர்கள் 16.10.2024ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.<br>எனவே மேற்படி வார்டு எண்.6ல் ரோஷனை பாட்டை முகமது தெருவில் திரு.V.பங்கஜ் த/பெ வித்யாசந்த் அவர்கள் தன்னுடைய தந்தை திரு.J. வித்யாசந்த் அவர்களின் நினைவாக தன்னுடைய சொந்த செலவில் புதியதாக அங்கன்வாடி மைய கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3076/2024/இ1)<br>**தீர்மானம் எண் :206, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 14 | இந்நகராட்சி பொது மக்களின் நலன்கருதி நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க பின்வரும் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே பின்வரும் பணிகளுக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2024–2025ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | வருவாய் நிதி – 2024–2025 | |
| 1 | வார்டு எண்.5, JV நகரில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 2.00 |
| 2 | வார்டு எண்.18, அழகப்பா தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.50 |
| 3 | வார்டு எண்.26, கற்பகவினாயகர் கோயில் தெரு மற்றும் ஜாய்ஸ் பொன்னையா தெருவில் மழை நீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. | 2.25 |
| 4 | எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின்போது தாழ்வான பகுதிகளில் மழை நிர் தேங்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள JCB மற்றும் டிராக்டர் வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள தோராய செலவினம். | 5.00 |

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.23857/2023/எம் ஏ1. நாள்.24.11.2024ம் தேதியசுற்றறிக்கையில் அறிவுறுத்ததப்பட்டதற்கிணங்க உரிய அனுமதி பெற்று நகராட்சியின் நிதி நிலைமையினை பொருத்து மேற்காணும் பணிகளை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 3745/2023/இ1)

**தீர்மானம் எண் :207, நாள் : 30.10.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 15 | திண்டிவனம் நகராட்சி வார்டு எண்.17 மற்றும் 33ல் வசிக்கும் பொதுமக்கள் தங்களின் உறவினர்கள் இறக்கும் தறுவாயில் அவர்களது கரும காரியம் செய்வதற்கு உரிய இடவசதி இல்லாமல் அவதியுறுகின்றனர். எனவே அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி கீழ் காணும் விபரப்படியாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் செலவீனம் மேற்கொள்ள கரும காரிய கூடம் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| வரிசை எண் | வார்டு எண் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 17 | 9.80 |
| 2 | 33 | 9.80 |

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.23857/2023/எம் ஏ1. நாள்.24.11.2024ம் தேதியசுற்றறிக்கையில் அறிவுறுத்ததப்பட்டதற்கிணங்க உரிய அனுமதி பெற்று நகராட்சியின் நிதி நிலைமையினை பொருத்து மேற்காணும் பணிகளை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 3107/2024/இ1)

**தீர்மானம் எண் :208, நாள் : 30.10.2024**

| | |
|---|---|
| | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 16 | திண்டிவனம் நகராட்சியில் SBM (U) 2.0 2024-2025 திட்டத்தின் கீழ் கீழ்காணும் விபரப்படியான சமுதாய கழிவறை மற்றும் பொது கழிவரைகளை புதியதாக அமைத்தல் மற்றும் பராமரிப்பு செய்திட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| **வ. எண்** | **பணியின் விவரம்** | | **மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | New Community Toilets | Construction of New Community Toilets at Rajagopal Nagar Ward-01 in Tindivanam Municipality | 18.00 |
| 2 | | Construction of New Community Toilets at Near Ambedkar statue Roshanai Ward-04 in Tindivanam Municipality | 18.00 |
| 3 | | Construction of New Community Toilets at Ayyanthoppu Ward-02 in Tindivanam Municipality | 18.00 |
| | | **Total** | **54.00** |
| 1 | New Public Toilet | Construction of New Public Toilet at Indra Gandhi BusStand Ward-29 in Tindivanam Municipality | 31.30 |
| | | **Total** | **31.30** |
| 1 | Retrofitting of Community Toilets | Retrofitting of Community Toilet at Santhimedu Ward-01 in Tindivanam Municipality | 4.42 |
| 2 | | Retrofitting of Community Toilet at Murungapakkam Ward-08 in Tindivanam Municipality | 4.42 |
| 3 | | Retrofitting of Community Toilet at Moongilamman Kovil Street Ward-09 in Tindivanam Municipality | 4.42 |
| 4 | | Retrofitting of Community Toilet at Throupathiyamman Koil street Ward-16 in Tindivanam Municipality | 4.42 |
| 5 | | Retrofitting of Community Toilet at Kaveripakkam Ward-20 in Tindivanam Municipality | 4.42 |
| 6 | | Retrofitting of Community Toilet at Kalaignar street ,Gidangal - 2 Ward-21 in Tindivanam Municipality | 4.42 |
| 7 | | Retrofitting of Community Toilet at R.C Compound Ward-22 in Tindivanam Municipality | 4.42 |
| 8 | | Retrofitting of Community Toilet at Poonthottam Ward-27 in Tindivanam Municipality | 4.42 |
| 9 | | Retrofitting of Community Toilet at R.S. Pillai street (Earikodi) Ward-27 in Tindivanam Municipality | 4.42 |
| | | **Total** | **39.80** |
| 1 | Retrofitting of Public Toilets | Retrofitting of Public Toilet Subramani koil street Ward-17 in Tindivanam Municipality | 5.40 |
| 2 | | Retrofitting of Public Toilet Flower Market Ward-27 in Tindivanam Municipality | 5.40 |
| 3 | | Retrofitting of Public Toilet cooshal chand Park Ward-13 in Tindivanam Municipality | 5.40 |
| 4 | | Retrofitting of Public Toilet (Namma Toilet ) Nehru street Ward-19 in Tindivanam Municipality | 5.40 |
| 5 | | Retrofitting of Public Toilet E-Toilet Marakkanam road | 5.40 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | Ward-26 in Tindivanam Municipality | |
| | | | | **Total** | **27.00** |
| | | | | **Grand Total** | **152.10** |

அலுவலக குறிப்பு:-

1. மேற்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்காணும் பணிகளை SBM2.0(U) திட்ட நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3745/2023/இ1)

**தீர்மானம் எண் :209, நாள் : 30.10.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 17 | திண்டிவனம் நகராட்சி வார்டு எண்.2, அய்யந்தோப்பு நகராட்சி பள்ளியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறு மண் சரிந்து பழுதடைந்துள்ளதால் தண்ணீர் வசதி இல்லாமல் உள்ளது எனவே மாணவர்களுக்கு தண்ணீர் வசதி செய்ய ஆழ்துளை கிணறினை மறுசீரமைக்கவும் அதற்கான மதிப்பீடு ரூ.1.80 இலட்சத்திற்கும் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3481/2024/இ2)<br>**தீர்மானம் எண் :210, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 18 | இந்நகராட்சியில் அனைத்துப் பிரிவுகளும் கணினி மயமாக்கப்பட்டு விட்டதால், அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் பயன்பாடு தேவை ஏற்படுகிறது. ஒவ்வொரு பிரிவுகளிலும் கணினியில் தட்டச்சு செய்வதை பிரிண்ட் எடுப்பதற்கும், வருவாய் பிரிவில் சொத்துவரி, தொழில்வரி, கடைவாடகை மற்றும் குடிநீர் வரி கேட்பு அறிவிப்புகள் பிரிண்ட் எடுப்பதற்கும் தூய்மை இந்தியா திட்டப்பணிகள் மற்றும் பொறியியல் பிரிவு மற்றும் கணக்கு பிரிவுகளில் வவுச்சர் அறிக்கைகள் எடுப்பதற்கும் டோனர் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும், உயர்அலுவலர்களால் கோரப்படும் புள்ளி விவரங்களை உடனுக்குடன் எடுப்பதற்கும் அறிக்கைகள் தயார் செய்யவும் தேவையான 28ஏ, 12ஏ, 337, 77, ரீ-பில்லிங் மற்றும் ஜெராக்ஸ் மிஷன் டோனர்கள் 2024-2025ம் ஆண்டிற்கு வாங்கி பயன்படுத்திக் கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2297/2020/பி2)<br>**தீர்மானம் எண் :211, நாள் : 30.10.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**தலைவர்,**
**திண்டிவனம் நகரமன்றம்.**

# திண்டிவனம் நகராட்சி

## அவசரக் கூட்டம்

## முன்னிலை : திருமதி.ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.

30.10.2024 புதன் கிழமை அன்று பிற்பகல் 5.00 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற உள்ள நகர மன்ற அவசரக் கூட்டப் பொருள் விபரம்.

| வ. எண் | <u>பொருள் விபரம்</u> |
|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட சென்னை – திருச்சி நெடுஞ்சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையம் அமைய முக்கிய காரணமாக திகழ்ந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரான "முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்" என பெயர் வைத்திட நகரமன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்தின்படி இந்நகராட்சியில் புதியதாக அமையவுள்ள பேருந்து நிலையத்திற்கு "முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்" என பெயர் சூட்டிட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.<br>திண்டிவனம் நகரமன்ற தீர்மானங்களையும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையையும் அரசு கூர்ந்தாய்வு செய்து அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.06.1998–யிலிருந்து விலக்களித்து, திண்டிவனம் நகராட்சியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு "முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்" என பெயர் சூட்டிட முடிவு செய்து அவ்வாறே அரசானை (நிலை) எண்.141, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.21.10.2024–யில் ஆணையிடப்பட்டு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் பதிவுசெய்யலாம். (ந.க.எண். 2569/2024/எப்1)<br>**தீர்மானம் எண் :212, நாள் : 30.10.2024**<br>**பதிவுசெய்யப்பட்டது.** |

**2**

திண்டிவனம் செஞ்சி ரோட்டில் உள்ள வாட்டர் டேங்க் எதிரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் பழுதான நிலையில் நகராட்சிக்கு சொந்தமான பொருட்களை வைத்து மூடப்பட்ட நிலையில் உள்ளது. அந்த கட்டிடத்தை புதுப்பித்து நூலகம் அமைதால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தி பலன் அடைவார்கள். எனவே மேற்படி கட்டிடத்தை புதுப்பிக்க மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /2024/இ1)

**தீர்மானம் எண் :213, நாள் : 30.10.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

**3**

2024–2025 ஆம் ஆண்டில் திண்டிவனம் நகராட்சிக்கு சொத்து வரி செலுத்தும் கட்டிட உரிமையாளர்களுக்கு அக்டோபர் 31–ம் தேதிக்குள் செலுத்தினால் 5% ஊக்கத்தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பை பொதுமக்கள் அறியும் வண்ணம் பொதுமக்கள் அதிகம் கூடும் இடத்தில் விளம்பர பலகைகள் மூலம் விளம்பரம் செய்ய , வரி விதிப்புதாரர்களுக்கு துண்டுப் பிரசுரம் அச்சிட்டு வழங்குவது.

மேலும் வரி மற்றும் வரி இல்லா இனங்கள் தொடர்பான விளம்பரங்கள் பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோகள் மூலம் செய்ய தோராய செலவினம் ரூ.3,20,000/– (மூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்) வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்1229 /2023/அ2)

**தீர்மானம் எண் :214, நாள் : 30.10.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**4**

இந்நகராட்சியில் பின்வரும் பணிக்கு அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றுள்ளதின் அடிப்படையில் 17.10.2024 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது..

| S. No | Details | Sri Shanmuga Agency | Sasi Agency | Anjali Agency |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் சொத்து வரி செலுத்தும் கட்டிட உரிமையாளர்கள் (அக்டோபர் 31–ந்தேதிக்கள்) 2024–2025 ஆம் ஆண்டின் சொத்து வரி இரண்டாம் அரையாண்டு அக்டோபர் 31–ம் தேதிக்குள் செலுத்தினால் 5% ஊக்கத்தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பை பொதுமக்கள் அறியும் வண்ணம் பொதுமக்கள் அதிகம் கூடும் இடத்தில்<br>1. விளம்பர பலகைகள் 05 எண்ணிக்கை ( ரீப்பர்ஆணி, கட்டு கம்பி, கயிறு, பசை, ஆள் கூலி உட்பட) | ரூ.10750 | ரூ.12050 | ரூ.12800 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2. துண்டுப் பிரசுரம் 7000 nos எண்ணிக்கை | ரூ.21000 | ரூ.22750 | ரூ.24500 |
| | 3. மூன்று தினங்களுக்கு இரண்டு ஆட்டோகள் மூலம் விளம்பரம் செய்ய (ஆட்டோ வாடகை டிரைவர் கூலி, டீசல்/பெட்ரேல், ஆம்ளிபையர், ஒலிபெருக்கி மற்றும் பேட்டரி உள்பட) | ரூ.21300 (3550 நாள் ஒன்றுக்கு/ ஒரு ஆட்டோக்கு ) | ரூ.21900 (3650 நாள் ஒன்றுக்கு/ ஒரு ஆட்டோக்கு) | ரூ.22200 (3700 நாள் ஒன்றுக்கு/ ஒரு ஆட்டோக்கு) |
| | **மொத்தம் ரூபாய்** | 53050/- | 56700/- | 59500/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. **Sri Shanmuga Agency** திண்டிவனம் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியை பணியின் அவசரம் அவசியம் கருதி 17.10.2024 ல் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பதிவுசெய்யலாம்.
2. மேற்படி செலவினத்தை அவசர அவசியம் கருதி நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1229/2024/அ2)

**தீர்மானம் எண் :215, நாள் : 30.10.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்/– ஆர். நிர்மலா**
தலைவர்
திண்டிவனம் நகர மன்றம்

**// உண்மை நகல் //**

4/11/24

ஆணையாளர்
திண்டிவனம் நகராட்சி

4/11/24